


# விநாயகா மிஷன்ஸ் ஆராய்ச்சி நிறுவனம்,

# (நிகர் நிலை பல்கலைக்கழகம்)

# ஆறுபடை வீடு பொறியியல் கல்லூரி

# 25 ஆம் ஆண்டு வெள்ளி விழா

**28th November 2025**

விநாயகா மிஷன்ஸ் ஆராய்ச்சி நிறுவனம், (நிகர் நிலை பல்கலைக்கழகம்)- ஆறுபடை வீடு பொறியியல் கல்லூரி சார்பில் "சில்வர் ஸ்பார்க் 2025 – ஐடியாதான்" என்ற நிகழ்ச்சி, பல்கலைக்கழகத்தின் வெள்ளி விழாவை முன்னிட்டு, 28 நவம்பர் 2025 அன்று கல்லூரி அரங்கில் சிறப்பாக நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியின் நோக்கம், மாணவர்களிடையே புதுமை, தொழில் முனைப்பு சிந்தனை மற்றும் தொழில்நுட்ப அடிப்படையிலான பிரச்சனைக்கான தீர்வுகளை ஊக்குவிப்பதாகும்.

கல்லூரி முதல்வர் முனைவர் J. ஜானட் வரவேற்புரை நிகழ்த்தி, மாணவர்களின் புதுமை திறன்களை மேம்படுத்தும் சூழலை உருவாக்குவதின் அவசியத்தை வலியுறுத்தினார்.

பல்கலைக்கழக வேந்தர் டாக்டர் ஏ. எஸ். கணேசன் மற்றும் துணைத் தலைவர் டாக்டர் அனுராதா கணேசன் அவர்கள், பங்குபெறும் மாணவர்களுக்கு தங்கள் வாழ்த்துக்களை தெரிவித்தனர்.

விழா தொடக்க உரை ஆற்றிய துணைவேந்தர் முனைவர் பி. கே. சுதீர், மாணவர்கள் தங்கள் சிந்தனைகளை உலகளாவியத் தேவைகளுடன் இணைத்து புதிய முயற்சிகளை கையாள வேண்டிய அவசியத்தை வலியுறுத்தினார்.

IIC & IIE இயக்குனர் முனைவர் பி. ஞானசேகர், ஐடியாதான் பற்றிய நோக்கம், அமைப்பு மற்றும் புத்தாக்க ஆராய்ச்சியின் முக்கியத்துவம் குறித்து கருத்துரைத்தார்.

“Silver Spark 2025 Internal Ideathon”-இற்காக மொத்தம் 86 திட்டங்கள் பல்கலைக்கழகத்தின் உறுப்பு கல்லூரியைச் சேர்ந்த மாணவர்களிடமிருந்து பெறப்பட்டன. அவற்றில் 78 திட்டங்கள் முதற்கட்ட மதிப்பீட்டிற்கு தேர்வு செய்யப்பட்டு, பின்னர் 26 அணிகள் இறுதிப்போட்டிக்கு முன்னேறின.

இப்போட்டி இரண்டு சுற்றுள்ளாக நடைபெற்றது. சுகாதார தொழில்நுட்பம், நிலைத்தன்மை, டிஜிட்டல் மேம்பாடு, ஸ்மார்ட் ஆட்டமேஷன், சமூக நலத்திட்டங்கள் போன்ற துறைகளில் மாணவர்கள் தங்கள் திட்டங்களையும் யோசனைகளையும் முன்வைத்தனர்.

இப்போட்டியின் நடுவர்களாக தொழில் துறையைச் சேர்ந்த திரு. ஜே. விஜயராகவன், Senior SME – Technical, HCLTech மற்றும் திரு. ஜே. சுப்ரமணியன், Digital Delivery Head, Kiya AI அவர்கள், கலந்துகொண்டு புதுமை, செயல்படுத்தும் சாத்தியம், சமூக தாக்கம் மற்றும் தரம் ஆகிய அடிப்படைகளில் அணிகளை மதிப்பீடு செய்தனர்.

விழாவின் நிறைவுரை ஆற்றிய திரு. சரவணன் சுந்தரமூர்த்தி, ஏஞ்சல் முதலீட்டாளர், திட்ட ஆலோசகர், பட்டய உறுப்பினர்(charter member), தி இண்டஸ் எண்ட்ரெபிரனர்ஸ் (TiE), மாணவர்கள் புதுமைக்கான தேடலில் தொடர்ந்து ஈடுபட்டு, தோல்வியை கண்டு அஞ்சாமல் செயல்பட வேண்டும் என்று அறிவுறுத்தினார்

மிகவும் நம்பிக்கைக்குரிய ஐடியாக்களுக்கு பரிசுத் தொகையாக ₹50,000/- விநியோகிக்கப்பட்டதுடன் ஐடியாத்தான் நிறைவு பெற்றது. புதுச்சேரி ஆறுபடை வீடு மருத்துவக் கல்லூரியைச் சேர்ந்த Sahay AI அணி முதல் பரிசைப் பெற்றது, அதே நேரத்தில் சேலத்தில் உள்ள VIMS, Allied Health Sciences பள்ளியைச் சேர்ந்த Blink X Innovators அணி முதல் ரன்னர்-அப் பட்டத்தை வென்றது. புதுச்சேரியில் உள்ள ஸ்கூல் ஆஃப் அலிட் ஹெல்த் சயின்சஸ் ANCLID அணி இரண்டாம் இடத்தைப் பிடித்தது. அவர்களின் புதுமையான பங்களிப்பை பாராட்டி, VMKV இன்ஜினியரிங் கல்லூரியின் நியோ-குரா குழுவிற்கும் ஆறுபடை வீடு இன்ஸ்டிடியூட் ஆப்

டெக்னாலஜியின் EGO Forge குழுவிற்கும் கூட்டாக ஆறுதல் பரிசுகள் வழங்கப்பட்டன.கல்லூரியின் துணை முதல்வர் முனைவர் எல். பிரபு நன்றியுரை நல்கினார்.

இந்த நிகழ்ச்சி HCLTech மற்றும் Wadhwani Foundation உடன் இணைந்து நடத்தப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது. இந்த Silver Spark 2025 Ideathon, மாணவர்களின் புதுமை, தொழில் முனைப்பு மற்றும் ஆராய்ச்சி சார்ந்த செயல்பாடுகளை மேம்படுத்துவதில் மிகவும் முக்கியமான அம்சமாக அமைந்தது. இந்நிகழ்ச்சியை கல்லூரி பேராசிரியர் குழுவினர் சிறப்பாக செய்திருந்தனர்.